RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s814

# நடுத்தீர்வை உலாவில் கிறித்தவ அறுதி விளைவியல்

**தோ. நிஷா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்-629001, தமிழ்நாடு, இந்தியா

# Christian Eschatology in Nadutheervai Ula

**T. Nisha** [a, *]

[a] Department of Tamil, Scott Christian College (Autonomous), Nagercoil-629001, Tamil Nadu, India

* Corresponding Author: nishajeyasingh@gmail.com

Received: 11-04-2021
Revised: 07-05-2022
Accepted: 20-05-2022
Published: 20-07-2022

Check for updates

**ABSTRACT**

In Christian Literary, types of Sitrilakkiyangal have been created on a large number. From Jesus birth to Second coming up to all these events were visualized. As such, Kanagappan wrote 'Nadu Theervai ula' indicates the events that will take place on arrival of Jesus Christ. As such, there is resurrection after death having is a common faith in all religions. World is not stable will get results Jesus christ second coming will bring many changes in the world, this book is researched according to Christian theories. In the period of Christian Eschatology disaster occur in nature so people cannot live human love will change Jesus will create the new world these theories are explained. Nadutheervai Ula literature is differently situated in Christian literature. Various changes in nature will occur on final day. The changes are obvious every one, be if birds, animals, humans and children. The events held in the Ulaa are strengthened by the inclusion of biblical messages in the Nadutheervai Ula. This commentary is the literature that gives advice to the people living in this world. This literature is different in Christian literature especially in Ulaa literature.

**Keywords:** Christian Eschatology, Nadutheervai Ula, Sitrilakkiyam, resurrection, Diaster

## முன்னுரை

தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக வியக்கத்தக்க தொண்டாற்றிய ஐரோப்பியக் கிறித்தவ இறைத்தொண்டர்கள் தமிழில் பல்வேறு இலக்கியங்களையும் இறைநெறிப் பாடல்களையும் படைத்தனர். இவர்களைப் பின்பற்றி தமிழ் நாட்டவரும் இறைநெறிப் பாடல்களை படைப்பதில் ஆர்வம் காட்டினர். தமிழ்நாட்டு இறைத்தொண்டர்களில் வேதநாயகம் சாஸ்திரியார் வேதநாயகம் பிள்ளை ஜான் பால்மர் ஞான மிக்கேல் பிள்ளை முதலியோர் இன்றியமையாதவர்களாவர். இவர்கள் கிறிஸ்துவின் பிறப்பு பணி மரணம் வருகை நியாயத்தீர்ப்பு குறித்தச் செய்திகளை விவிலியம் சார்ந்து கற்பனை கலந்து இலக்கிய நயத்தோடு பாடியுள்ளனர். அவ்வகையில் கிறித்தவக் கோட்பாடான அறுதி விளைவியல் கோட்பாட்டைப் பின்பற்றி கனகப்பன் என்பவரால் எழுதப்பட்ட 'நடுத்தீர்வை உலா' என்னும் நூல் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## கிறித்தவ அறுதி விளைவியல்

'கிறிஸ்டியன் எஸ்கட்டாலஜி' என ஆங்கிலத்தில் கூறப்படும் 'கிறித்தவ அறுதி விளைவியல்' என்பது கிறித்தவ இறையியல் ஆய்வில் கடைசி கால நிகழ்வுகள் குறித்த ஆய்வாகும். 'அறுதி' என்பதற்கு இறுதி அல்லது முடிவு என்பது பொருளாகும். இது 'காலயியல்' எனவும் அழைக்கப்படுகிறது.

மனித வாழ்வு இவ்வுலகத்தோடு இவ்வுடலோடு முடிந்துவிடுவது அல்ல என்பதே இக்கோட்பாட்டின் மையக் கருத்தாகும். தமிழ் இலக்கியங்களிலும் விழுப்புண் பெற்ற வீரர்கள் இறந்த பின் மேல் உலகிற்கு செல்வார்கள் என்னும் கருத்து பதிவு செய்யப்பட்டுள்ளது. "இவ்வுலகத்தை தமிழ் இலக்கியங்கள் மேலோர் உலகு என்று குறிப்பிடும். கோதிக்புராணங்கள் இத்தகைய மேல் உலகத்தினை வல்காலா என்றுச் சுட்டுகின்றன. கிரேக்க இலக்கியங்கள் வீரர்கள் சென்றடையும் மேல் உலகத்தை எலிசியம் என்றும் வடநாட்டு இலக்கியங்கள் வீரச்சொர்க்கம் என்றும் அழைப்பதைக் காணலாம்" (John Samuel, 2014). இக்கோட்பாட்டின்படி தனிநபருடைய வாழ்வு மட்டுமல்ல இவ்வுலகமும் முடிவு பெறும். மேலும் இறப்பும் இறப்பிற்குப் பின்னான வாழ்வு மேலுலக வாழ்வு நரக வாழ்வு இயேசுவின் இரண்டாம் வருகை இறந்தவர் உயிரோடெழுதல் ஆயிரமாண்டு ஆளுகை உலகத்தின் முடிவு நியாயத்தீர்ப்பு புதிய வானம் புதிய பூமி ஆகியவற்றை ஆய்வதாக அறுதிகால விளைவியல் உள்ளது. "எபிரேயத் திருமறையில் உள்ள அறுதி விளைவியல் என்பது இஸ்ரவேல் மக்கள் கடவுளின் சட்டத்திற்கும் விருப்பத்திற்கும் கீழ்படியாமல் இருப்பதால் ஏற்படும் பேரழிவுகளைக் காண்பிக்கிறது. மேலும் கடவுளின் திட்டத்திற்கு இணங்குவதால் புதுப்பித்தல் மற்றும் கடவுளின் நோக்கம் நிறைவேறும். இயேசுவின் வாழ்க்கையுடனும் ஊழியத்துடனும் இந்த இறுதி காலம் தொடங்கியதாகக் கருதப்படுகிறது." கிறித்தவ அறுதி விளைவியல் என்பது விவிலியத்தின் பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு நூல்களின் அடிப்படையில் தனிநபரின் ஆன்மா உண்டாக்கப்பட்டிருக்கும் மொத்த படைப்பு என்பவைகளின் அறுதி ஊழ்வினையைக் கூறுகிறது (Hoiberg et al., 2013).

## நூல் அறிமுகம்

நடுத்தீர்வை உலாவை எழுதியவர் கனகப்பன். இந்நூலைப் பதிப்பித்தவர் இராசரத்தின முதலியார். உலா இலக்கிய மரபைப் பின்பற்றி இந்நூல் பாடப்பெறவில்லை. நியாயத்தீர்ப்பு நாளில் இறைவன் மேகங்களில் காட்சிக்கொடுத்து மனிதரின் செயல்களுக்குத் தக்கதாக இறுதித் தீர்ப்பு வழங்குவார் என்பதை மையமாக வைத்து இவ்வுலா இயற்றப்பட்டுள்ளது. உலகத்தின் முடிவில் இயற்கை மற்றும் மனித வாழ்வில் ஏற்படும் மாற்றங்களையும் குறிப்பிட்டு அந்திக்கிறிஸ்துவின் வருகையையும் உலகத்தின் முடிவையும் விவரித்துள்ளார்.

## இயற்கையும் அறுதிவிளைவியலும்

கிறித்தவக்கோட்பாட்டின்படி இயற்கை இறைவனால் படைக்கப்பட்டது. அதனைப் பாதுகாக்க வேண்டிய கடமை மனிதனுடையது. "கிறித்தவ எதிர்கால நம்பிக்கையில் அண்ட பரிணாமம் முக்கிய இடம்பெறுகிறது. மனிதனை மட்டுமே மையப்படுத்திய இறையியலை சூழலியலோடு பொருத்தி நோக்கும் புதிய சிந்தனையும் வளர்ந்துள்ளது. மனிதன் பறவைகள் இயற்கை யாவும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. எனவே அறுதி விளைவியலில் மனிதனுக்கு மட்டுமல்ல சூழலியலுக்கும் பங்கு உண்டு" என்பதே தற்போதைய இறையியலாளரின் கருத்தாகும் (Venter, 2015).

அறுதிவிளைவியலில் இயற்கை பாதிப்புக்குள்ளாகும். மழையின்றிப் பயிர்கள் கருகும். வெள்ளப் பெருக்கால் பஞ்சம் ஏற்படும். பனை நிலங்கள் நாசமடையும் பயிர்களில் நோய் தாக்கும் வெப்ப மிகுதியால் காய் கனிகள் கருகும் சூரியனின் வெப்பம் அதிகரிக்கும் வெயிலின் கொடுமையால் மலையும் பொடியாகும் கடல் நிலப்பரப்பில் வந்து பூமியை மூழ்கடிக்கும் இதனை

"வளமாரி பெய்யாமல் வானஞ் சுருங்குங்

களையாற் பயிர்கள் கசங்கும் - பிழையாக

வெள்ளத்தாற் பஞ்சமதாம் வெஞ்சாவி யாகிவிடும்

பள்ளப் பனை நிலங்கள் பாழாகும்"

என்னும் வரிகளில் குறிப்பிடுகிறார் (John Samuel, 2014). மாறிவரும் இயற்கை குறித்தச் சிந்தனைகளும் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கருத்தியல்களும் அறுதிவிளைவியலின் கோட்பாட்டிற்கு வலு சேர்க்கின்றன.

உலக முடிவின்போது பறவைகளிடமும் விலங்குகளிடமும் மாற்றங்கள் ஏற்படும் மீனுக்கு கால் உண்டாகும். கீரி பாம்புக்கும் எலிக்கும் பயப்படும். நாயை முயல் மிரட்டும் யானை பூனையைக் கண்டு பயப்படும். ஒரு கோழி முட்டையில் இரண்டு மூன்று குஞ்சுகள் பொரிக்கும் பெடைக்கோழி கூவும். கோழி ஒரே நாளில் இரண்டு மூன்று முட்டையிட்டு மறுநாளே பொரிக்கும்.

"அழியுநாள் கிட்ட அடுக்கையிலே யெல்லாஞ்

சுழிபோல மாறிச் சுருங்கி - யிழிவாகுங்

காணாவதிசயங்கள் காணுமே காசினியில்

தோணாதெல் லாமிக்கத் தோணுமே"

உலகத்திற்கு அழிவுநாள் நெருங்கி வரும்போது இதுவரையில் நடைபெறாத அதிசயங்கள் யாவும் உருவாகும் (John Samuel, 2014).

## மாறும் மனித வாழ்வு

இயற்கையில் மாற்றம் நிகழுவதைப் போன்று மனித வாழ்விலும் ஏற்படும். உலக இறுதியில் 'மனித அன்பு குறைந்து போகும்' என்று விவிலியம் குறிப்பிடுகிறது. இன்றும் மனிதனை மனிதன் கொலைபுரிவது முதல் சிறுபிள்ளைகள் கொடூரமாகக் கொல்லப்படுவதன் பின்னணியில் அன்பு குறைவதை அறியமுடிகிறது. நடுத்தீர்வை உலாவும் இதனை எடுத்துரைக்கிறது. பசியும் நோயும் பெருகும் ஆட்சியாளர் கைக்கூலிக்காக நீதி வழங்குவர். குடும்ப உறவுகளில் பிறழ்வுகள் ஏற்படும். பெண்கள் வாழ்வில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். பெண் வயிற்றில் பேய் மிருகம் போல் பிள்ளைகள் பிறந்து அசாதாரணமான மனித வாழ்வு உருவாகும்.

"சின்ன குழந்தைக்குச் சிற்றின்பந் தோன்றியே

மன்னு கபடான வார்த்தை சொல்லும்"

சிறு குழந்தைகளின் செயல்பாடுகளிலும் மாற்றம் ஏற்படுவது அறுதிவிளைவியலின் வெளிப்பாடாகும் என்பதை ஆசிரியர் புலப்படுத்துகிறார் (John Samuel, 2014).

இத்தகைய மாற்றங்கள் உயிரினங்களில் நிகழும்போது அந்திக் கிறிஸ்து என்னும் அநியாயக்காரன் வருவான். அந்திக் கிறிஸ்து சில ஆண்டுகள் உலகை ஆட்சி செய்வான். அவன் மக்களைத் தனது தந்திரத்தால் வசப்படுத்தி நானே கடவுள் என்றும் வானத்திலிருந்து வந்தவன் என்றும் தன்னை எல்லோரும் வணங்க வேண்டும் என்றும் வற்புறுத்துவான். அந்திக் கிறிஸ்துவின் அதிகாரம் எல்லை மீறும்போது இறைவன் தூதரை அனுப்பி அந்திக் கிறிஸ்து என்னும் அரக்கனை கொன்று அழிப்பார்.

## இறையரசு

பாலஸ்தீனத்தில் வாழ்ந்த யூதர்கள் நடுவில் தோன்றியதே இறையரசு பற்றிய சிந்தனை ஆகும். "யூதர்கள் உரோமர்களுக்கு அடங்கி வாழ வேண்டிய சூழல் உருவாயிற்று அப்போதே அவர்களுடைய சிந்தனையிலும் மாற்றம் ஏற்பட்டது. யூதர்கள் உலக அரசு என்ற எண்ணத்திலிருந்து வளர்ச்சி பெற்று என்றும் விடுதலை வாழ்வை நிலையாகத் தரக்கூடிய இறையரசை எதிர்நோக்கலாயினர்" (Deivanayagam, 1997).

மேலும் இயேசுவின் காலத்திலும் அவருக்கு முன்னர் வாழ்ந்த இறைவாக்கினரின் காலத்திலும் பல்வேறு சீர்கேடுகள் மிகுந்திருந்தன. ஏழை எளியவர்கள் ஒடுக்கப்பட்டனர். இந்நிலையில் இவையாவும்

அகன்ற அன்பு நீதி சமத்துவம் நிறைந்த உலகுக்காக யாவரும் காத்திருந்தனர். "எதிர்காலத்திலேனும் அவலங்கள் ஒழிந்த புதிய உலகம் ஒன்று அமையும் என்று நம்பினர். தாம் எதிர்நோக்கிய அந்த லட்சிய உலகினைப் 'புதிய வானம் புதிய பூமி' என்று பேசி வந்தனர். அதனையே யேசு 'இறையரசு' என்று குறிப்பிட்டார்" (Jesu Raj, 1990). இந்த இறையரசு வரும்போது இறந்தவர்கள் உயிரோடு எழும்புவார்கள். அவரவர் செய்த நன்மை தீமைக்கேற்ற பலனை அடைவார்கள் தீமை செய்தவர்கள் அழுது புரண்டாலும் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது. நீதி நெறிப்படி வாழ்ந்தவர்கள் இயேசுவின் வலதுபுறத்திலும் தீமை செய்தவர்கள் இடதுபுறத்திலும் நிற்பர் என்பதை

"நீதி விளக்க நெறியே நடந்துவந்த

மாதவராம் நல்லோர் வலதுபுறம் - தீதுவளர்

யெல்லா ரிடது புறமாக நின்றபின்பு

நல்லோர்க ளாசை நயமுற்றுச் சொல்லுவார்"

என்ற பாடல்வரிகள் மூலம் தெளிவுபடுத்துகிறார் இறையரசுக்கு சொந்தமானவர்கள் நியாயமான வழியில் நடந்தவர்கள். ஏழைகளுக்கு உணவு உடை உறைவிடம் கொடுத்து உதவி செய்தவர்கள் நோயுற்றோருக்கு ஆறுதல் கூறியவர்கள் நாடி வந்தவர்களுக்கு இல்லையென்று கூறாமல் உதவி செய்தவர்கள் என எடுத்துரைக்கின்றார் (John Samuel, 2014).

புத்துலகக் கனவில் ஈடுபட்ட இறைவாக்கினர் தாம் எதிர்நோக்கிய புதிய உலகின் காட்சிகளைத் தம் உள்ளுணர்வில் கண்டு கூறிய செய்திகள் சமூக நீதிச் சார்ந்ததாக உள்ளது.

இந்நூலில் விவிலியச் செய்திகளும் இடம்பெறுவதன் மூலம் உலாவில் கூறப்படும் நிகழ்வுகள் வலுப்பெறுகின்றன. நடுத்தீர்வை உலாவில் கூறப்பட்டிருப்பது போன்ற செய்திகள் இன்றைய நடைமுறை வாழ்வில் நடந்து வருகின்றன. சூழியலில் ஏற்பட்டுள்ள மாற்றம் வித்தியாசமான மனிதரின் பிறப்பு கொடூர மனிதர்கள் குறித்தச் செய்திகளை தினமும் ஊடகங்களில் காணமுடிகிறது. மனிதருக்கு அறிவுரை கூறும் இலக்கியமாகவும் நீதியான வாழ்வு வாழ அறைகூவல் விடுக்கும் இலக்கியமாகவும் இவ்வுலா நூல் விளங்குகின்றது.

## முடிவுரை

கிறித்தவக் கோட்பாடுகளில் அறுதி விளைவியல் என்பது உலக முடிவு பற்றிய கோட்பாடாகும். அவ்வகையில் நடுத்தீர்வை உலாவில் அறுதிவிளைவியல் குறித்தச் செய்திகள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. உலக முடிவில் இயற்கையிலும் மனிதருடைய செயல்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்படும். பின்னர் அந்திக் கிறிஸ்துவின் வருகையும் அவனுடைய அழிவும் ஏற்படும். இறுதியாக யாவரும் விரும்பும் இறையரசை இறைவன் நிறுவுவார் என்பதே அறுதிவிளைவியலாகும். சூழலியலைப் பராமரித்து பாதுகாக்கும் கடமை ஒவ்வொரு தனிமனிதனுக்குரியது. அக்கடமையிலிருந்து தவறும் போது இயற்கை தனது எதிர்வினைகளால் தீமை விளைவிக்கும் எனவே இயற்கையைப் பாதுகாப்பது அவசியம் என்பதை இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. மேலும் இறுதிநாள் நெருங்கும் போது மனிதர் ஒருவருக்கொருவர் பகைக் கொண்டு விரும்பதகாத செயல்களைச் செய்வர் என்பதையும் இத்தகைய மாற்றங்களின் போது அந்திக் கிறிஸ்து வருவான் என்பதும் விளக்கப்பட்டுள்ளது. மேலும் இறையரசின் மூலம் அமைதியான வாழ்வு உருவாகும் என்பதை யூதர்கள் நம்பினர். இறையரசின் உண்மையான கருத்து எளியோருக்கு உதவி செய்வது என்பதும் இக்கட்டுரை மூலம் விளக்கப்பட்டுள்ளது.

## References

Deivanayagam, M., (1997) Viviliam Thirukural Saiva Sithantham Opaivu, 2nd Edition Thiravida Samaya Arakattalai, Chennai, India.

Hoiberg, D.H., Mackenzie, M., Sacca, I., (2013) Britannica Reference Encyclopedia, First Edition, New Delhi, India.

Jesu Raj, C., (1990) Puthukavithaiyil Puthia Manida Sinthanaigal, First Edition, Kavin Malar Pathippagam, Kanyakumari, India.

John Samuel, G., (1986) Panpattu Kalappum Illakia Orumaiyum, First Edition, Iyinthinai Pathippagam, Chennai, India.

John Samuel, G., (2014) Kirithava Sittilakkia Thirattu, 1st Edition, Publications Division Institute of Asian Studies, Chennai, India

Venter, R., (2015), Trends in Contemporary Christian eschatological reflection, Missionlia, Southern African Journal of Mission studies, 43(1), 105-123. http://dx.doi.org/10.7832/43-1-72

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License